# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 11.04.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

அல்லாஹ் திருக்குர்ஆனில் பயணம் தொடர்பாக பல்வேறு கருத்துக்களைக் கூறி நமக்கு கவனமூட்டியுள்ளான். நபிமார்களை மறுப்பவர்களைப் பார்த்து நீங்கள் சுற்றித்திரிந்து நபிமார்களை மறுக்கின்ற சமுதாயங்களின் முடிவு எப்படி இருந்தது? என்பதை பார்க்கும்படி கூறியுள்ளான். எகிப்தில் ஃபிர்அவ்னின் சடலத்தை இன்று வரை பாதுகாத்து வைத்து நபிமார்களை மறுப்பவர்கள், வரம்பு மீறி செயல்படுபவர்கள் ஆகியோருக்கு நிரந்தரமாக ஒரு படிப்பினையை பெறுவதற்கான வழியை ஏற்படுத்தியுள்ளான். ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் அதை பார்க்கின்றார்கள். பிறகு அந்த சடலம் தொடர்பான விஷயங்களை அவர்கள் கேட்கின்றார்கள். இன்டர்நெட்டிலும் இதைப் பற்றிய தகவல்கள் இருக்கின்றன. இதைப் பார்ப்பவர்களில் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஆகியோரும் இருக்கின்றார்கள். மற்ற மதத்தைச் சார்ந்தவர்களும் இருக்கின்றார்கள். எந்த மார்க்கத்தையும் சேராதவர்களும் இருக்கின்றார்கள். இறைவன் மீது அச்சம் இருக்கும் என்றால் ஃபிர்அவ்னுக்கு நாம் படிப்பினையைப் பெறும் வகையிலுள்ள எப்படிப்பட்ட முடிவை அவன் வழங்கியுள்ளான் என்பதை நாம் பார்க்க வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில், திருக்குர்ஆன் ஃபிர்அவன் தொடர்பாக கூறியுள்ள செய்திகள் பற்றி நேரில் கண்டு தெரிந்து கொள்வதற்காக பயணம் மேற்கொள்வதற்கு அதிகமான வசதிகள் இருக்கின்றன. திருக்குர்அனின் முன்னறிவிப்பிற்கேற்ப மிக சிறந்த முறையில் பயணத்திற்கான வசதிகள் இருக்கின்றன. அதன் மூலமாக பல பழைய பொருள்களை நாம் பார்க்க முடிகின்றது. ஆனால், எவர்களின் உள்ளத்தில் நன்மைக்கான விதை இருக்குமோ அவர்கள்தான் இவற்றிலிருந்தும் பலனைப் பெறுகின்றார்கள். மேலும் எவருக்கு இறைவன் நேர்வழியை வழங்க நாடுகின்றானோ அவரே இதிலிருந்தும் பலனைப் பெறுவார். ஒரு நபியை எதிர்த்தவரின் முடிவு தொடர்பாக ஃபிர்அவ்ன் பற்றிய சம்பவம் மட்டுமல்லாமல் திருக்குர்ஆனில் பல நபிமார்களைப் பற்றி குறிப்பிட்டுக் கூறி, அவர்களை மறுத்தவர்களின் நிலையைப் பார்ப்பதற்காக நீங்கள் பூமியில் சுற்றித் திரியுங்கள். அகழ் ஆராய்ச்சி மூலம் வெளிப்பட்ட செய்திகளை ஒன்றுதிரட்டுங்கள். அதன் மூலமாக பெருமை கொள்வதும், கர்வம் கொள்வதும் ஒன்றுமேயில்லை என்பது தெரிய வரும் என்று கூறியுள்ளான். பெரும் பெரும் சமுதாயங்களின் அடையாளங்கள் கூட தெரியாமல் ஆகி விட்டன என்றும் கூறியுள்ளான்.

பிறகு பல்வேறு விதமான பயணங்கள் தொடர்பாகவும் அல்லாஹ் திருக்குர்ஆனில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு கவனமூட்டியுள்ளான். நம்பிக்கை கொண்டவர்கள் சமுதாயங்களின் படிப்பினை பெறத்தக்க முடிவைப் பார்த்து அல்லது அவை பற்றிப் படித்து, கேட்டு அல்லாஹ்வுடன் அதிகமாக தொடர்பை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். மேலும் இப்படிப்பட்ட சம்பவங்களைப் படித்துப் பார்த்து விட்டு ஒரு நம்பிக்கையாளர் அல்லாஹ்வின் பக்கம் அதிகமாக குனிவார். ஷய்த்தானிடமிருந்து தப்புவதற்கு அல்லாஹ்வின் அடைக்கலத்தைக் கேட்பார். அதன் மூலமாக தீய முடிவுகளிலிருந்தும் ஆபத்துகளிலிருந்தும் பாதுகாப்பாக அவர் இருப்பார். இரண்டாவதாக, ஒரு நம்பிக்கையாளரின் பயணம் இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக இருக்கும். அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றி கூறும் விதமாக அது இருக்கும். அல்லாஹ் திருக்குர்ஆனில் கற்றுத் தந்துள்ள துஆவின் மூலமாக அவர் தனது பயணத்தைத் தொடங்குவார். பிறகு துஆவுடன்தான் அவரது பயணம் முடியும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலைநாட்டியுள்ள அழகிய முன்மாதிரிக்கு ஏற்ப நடப்பதற்கு ஒரு நம்பிக்கையாளர் முயற்சி செய்வார். ஒரு உண்மையான முஸ்லிம் இவ்வாறெல்லாம் நடந்து கொள்வார் என்ற எதிர்பார்ப்புடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த போதனைகளையெல்லாம் கூறியுள்ளார்களே அதற்கேற்ப செயல்பட அவர் முயற்சிகளைச் செய்வார். ஒரு நம்பிக்கையாளரின் மற்ற எல்லா செயல்களையும் போன்றே அவரது பயணமும்கூட இறைவனின்

திருப்தியைப் பெறுவதற்காகவே இருக்கும். நன்மையை நிலைநாட்டுவதற்கும், நன்மையில் நிலைத்திருப்பதற்கும் அவரது பயணம் காரணமாக அமையும்.

**திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:**

تَزَوَّدُوا فَإِنَّ خَيْرَ الزَّادِ التَّقْوٰى - *பயணத்திற்கு தேவையான உணவை எடுத்துக் கொள்ளுங்கள். நிச்சயமாக மிகச் சிறந்த பயண உணவு இறையச்சமேயாகும்.* (2:198)

திருக்குர்ஆனின் இந்த சொற்கள் எங்கு வருகின்றனவோ அந்த இடத்தில் ஹஜ் தொடர்பாக கூறப்பட்டிருந்தாலும் அங்கு கூறப்பட்டுள்ள விஷயம் என்னவென்றால், நீங்கள் இஸ்லாத்தின் இந்த கடமையை நிறைவேற்றுவதற்காக செல்லும்போது எவர் எல்லாவிதமான மனயிச்சைகளின் நோய்களிலிருந்து தன்னை பாதுகாத்தவாறு நன்மைகளில் பாதங்களை முன்னோக்கி வைத்தவாறு இந்த தூய கடமையை நிறைவேற்றுவதற்காக வீட்டிலிருந்து வெளியேறி, அதற்காக எவர் முழுமையாக முயற்சி செய்வாரோ அவரே உண்மையான நம்பிக்கையாளர் என்று அல்லாஹ் இந்த வசனங்களில் கூறியுள்ளான்.

எந்த பயணப் பொருட்களை நீங்கள் உங்களுடன் கொண்டு சென்றாலும், எப்படிப்பட்ட செயல்களை நீங்கள் செய்தாலும் அதில் இறையச்சம் இருந்தால்தான் உங்களது ஹஜ்ஜும் ஏற்றுக் கொள்ளப்படும் என்றே அல்லாஹ் கூறியுள்ளான்.

ஆனால், இது நம்பிக்கையாளர்கள் பேண வேண்டிய ஒரு பொதுவான கட்டளையுமாகும். சிறந்த பயண உணவு தக்வாவேயாகும் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். நம்பிக்கையாளர்களின் பயணம் மிக உயர்வான நன்மைகளை சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திற்காக இருக்க வேண்டும். தக்வாவை கண்முன் நிறுத்தி செயல்பட்டு மேற்கொள்ளப்படும் பயணமே அல்லாஹ்வின் அருள்களுக்கு காரணமாக அமையும். அந்த பயணத்தில் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக நற்செயல்களைச் செய்வதற்கான முயற்சியும் கருத்தில் கொள்ளப்படும்.

எனவே, பயணங்கள் மூலம் அருள்களைப் பெற வேண்டும் என்றால் அதற்கான அடிப்படை நிபந்தனை தக்வா ஆகும். இதனை எல்லா நேரமும் ஒரு நம்பிக்கையாளர் கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும். அவ்வாறு செயல் பட்டால் உலகப் பலன்கள் பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் பயணங்களும் கூட அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுக் கொள்வதற்குரிய வழியாக ஆகி விடும். எனவே, இப்படிப்பட்ட பயணங்கள்தான் ஒரு நம்பிக்கையாளரின் மகிமைக்கு உகந்த பயணங்களாக இருக்கும். அவ்வாறு இருக்கவும் வேண்டும்.

ஒரு முஸ்லிம் உண்மையில் பயணத்திற்கான உணவாகிய தக்வாவை தன்னுடன் வைத்திருக்கும்போதுதான் அவர் ஒரு உண்மையான நம்பிக்கையாளர் இருக்கின்ற அணியில் நிற்கின்றார். அந்த நம்பிக்கையாளர்களின் சிறப்பான பண்புகள் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

அவர்கள் தவ்பா செய்பவர்கள், வணங்குபவர்கள், (இறைவனை) புகழ்பவர்கள், இறைவழியில் பயணம் மேற்கொள்பவர்கள், ருகூஉ செய்பவர்கள், ஸஜ்தா செய்பவர்கள், நன்மையை ஏவுபவர்கள், தீயவற்றிலிருந்து தடுப்பவர்கள், அல்லாஹ்வின் வரம்புகளைப் பாதுகாப்பவர்கள் ஆவார்கள். (இவர்கள் எல்லாரும்) உண்மையான நம்பிக்கைக் கொண்டவர்கள் ஆவர். நம்பிக்கைக் கொண்டவர்களுக்கு நீர் நற்செய்தியினை வழங்குவீராக. (9:112)

தக்வாவுடன் செயல்படுவதற்கு முதல் நிபந்தனை தவ்பா செய்வதாகும். அது எப்படிப்பட்ட உண்மையான தவ்பாவாக இருக்க வேண்டும் என்றால், அது ஒரு நம்பிக்கையாளருக்கும் பாவங்களுக்கும் இடையில் தூரத்தை ஏற்படுத்திக் கொண்டே செல்ல வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

ஒருவர் தொடர்ந்து தவ்பா செய்வதில் நிலைத்து நின்றால் அல்லாஹ் அவருக்கு உண்மையான தக்வாவை செய்வதற்கான வாய்ப்பை வழங்குவான். எதுவரையென்றால் தீமைகள் அவரிடமிருந்து முற்றிலும் அழிந்து அழகிய நல்லொழுக்கமும் புகழுக்குரிய நற்செயல்களும் அவற்றின் இடத்தில் வரும்.

தவ்பாவில் தொடர்ந்து நிலைத்து நிற்பதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்குக் கற்றுத் தந்துள்ள மருந்து ஒருவர் நான் இனி தீமைகளின் அருகில்கூட செல்ல மாட்டேன் என்று உறுதியாக முடிவு எடுத்துக் கொள்வதேயாகும். பிறகு தீமைகளின் இடத்தை அழகிய நல்லொழுக்கம் பிடித்துக் கொள்ளும். பிறகு அப்படிப்பட்ட நபரிடம் புகழுக்குரிய நற்செயல்கள் வெளிப்படும்.

இதுதான் உண்மையான தவ்பாவாகும். இதுவே நமக்கு பயணத்திற்கான உணவை வழங்கிக் கொண்டிருக்கும். பிறகு அதன் மூலமாக மனிதன் முழுமையாக இறைவனின் திருப்தியைப் பெற முயற்சி செய்பவராக ஆகின்றான். இறை உதவியின் பக்கம் அவரது கவனம் இருக்கும். அதனால், இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள ஒரு மூஃமினுக்குரிய நற்பண்புகளின் பக்கம் அவரது கவனம் இருக்கும். அதாவது இறைவனை வணங்குவது பற்றிய கவனம் இருக்கும். முழுமையாக அவர் இறைவன் முன்பாக குனிந்து விடுவார். தனது ஒவ்வொரு செயலையும் இறைவனின் திருப்திக்கேற்ப அமைத்துக் கொள்ள அவர் முயற்சி செய்வார். இப்படிப்பட்ட நிலை ஒரு மூஃமினிடம் ஏற்பட்டு விட்டால் பிறகு அந்த மூஃமினிடம் ஏற்படும் மூன்றாவது நிலை அவர் இறைவனை புகழக்கூடியவராக இருப்பார் என்பதாகும். நிலைமைகள் எவ்வளவு நன்றாக இருந்தாலும், மோசமாக இருந்தாலும் அந்த மூஃமின் பயணத்தில் இருந்தாலும், பயணத்தில் இல்லாமல் இருந்தாலும் அல்லாஹ்வைப் புகழ்வது அவரது நாவில் இருக்கும். பிறகு ஒரு மூஃமின் அல்லாஹ்வின் வழியில் பயணம் மேற்கொண்டால் அதனால் அவரது உலகமும், மார்க்கமும் சரியாகி விடும் என்ற நற்செய்தியை அல்லாஹ் வழங்கியுள்ளான். நீங்கள் இறைவனின் திருப்தியைப் பெற்றவர்களாக ஆகி விடுவீர்கள். அல்லாஹ்வை வணங்குவதற்காகவும் நன்மைகளைப் பரப்புவதற்காகவும் எந்தப் பயணம் மேற்கொள்ளப்பட்டாலும் அது அல்லாஹ்வின் அருள்களைப் பெறுவதற்குக் காரணமாக ஆகி விடும். பிறகு ஐந்தாவதாக ருகூஉ செய்கின்ற நம்பிக்கையாளர்களுக்கு நற்செய்தி வழங்கப்பட்டிருக்கின்றது. தொழுகின்றபோத ஒவ்வொரு ரக்அத்திலும் நாம் ருகூஉ செய்கின்றோம். ஆனால், உடலும் ஆன்மாவும் அல்லாஹ்வின் முன்பு குனிவதுதான் உண்மையான ருகூஉ ஆகும். உடலிலுள்ள ஒவ்வொரு அணுக்களும் இறைவனின் திருப்தியைப் பெற முயற்சி செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நிலை நிச்சயமாக எனது திருப்தியைப் பெறுவதற்குரிய வழியாகி விடும் என்று அல்லாஹ் நற்செய்தி வழங்கியுள்ளான். அடுத்து ஸஜ்தா செய்பவர்களுக்கு நற்செய்தி வழங்கப்பட்டிருக்கின்றது. தொழுகையில் மனிதன் செய்கின்ற ஸஜ்தாவானது மிகுந்த பணிவையும் தாழ்மையையும் வெளிப்படுத்தும் ஒரு நிலையாகும். ஸஜ்தா உண்மையான ஸஜ்தாவாக இருக்க வேண்டும். தானியங்களை உண்ணும் கோழி மீண்டும் மீண்டும் கொத்துவது போல் நமது ஸஜ்தாக்கள் இருக்கக்கூடாது என்றும், மாறாக, முழுமையான பணிவுடன் அல்லாஹ்வின் முன்னிலையில் சிரம் பணியும் வகையில் நமது ஸஜ்தாக்கள் இருக்க வேண்டும் என்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். ஸஜ்தாவின் நிலையில் மனிதன் இறைவனுக்கு மிக அருகில் இருக்கின்றான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஏனென்றால், அந்த நிலையில் அம்மனிதன் தனது நஃப்ஸை அழித்து அதனை அல்லாஹ்வின் முன்னிலையில் வைத்து விடுகின்றான். இதன் காரணமாக அல்லாஹ் அப்படிப்பட்டவருக்கு சிறந்த நற்கூலியை வழங்குகின்றான்.

இப்படிப்பட்ட நன்மைகளின் உயர்வான தரம் ஒரு மூஃமினுக்கு கிடைத்த பிறகு அதனை அவர் தனது எல்லைக்குள் மட்டும் வைக்காமல் அந்த நன்மைகளை அவர் பரப்ப வேண்டும்.

மற்றவர்களுக்கும் நன்மைகளின் அந்த உயர்ந்த தகுதியின் பக்கம் கவனமூட்ட வேண்டும். தீமைகளை எதிர்த்து ஜிஹாது செய்ய வேண்டும். தனது தீமைகளை தன்னிடமிருந்து அகற்றிய பிறகு எந்தெந்த விஷயங்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளிலிருந்து மனிதனை விலக்கி வைக்கின்றது? என்பதை உலகிற்கு எடுத்துக் கூற வேண்டும். இந்த தீமைகளின் காரணத்தால் ஒரு மனிதன் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்குப் பகரமாக அவர் ஷய்த்தானின் மடியில் சென்று அமர்ந்து விடுகின்றார். எனவே இந்த நன்மைகளைப் பெறுவது, அவற்றைப் பெறுவதுடன் மட்டுமல்லாமல் அவற்றைப் பரப்புவதற்காக பயணம் மேற்கொள்வது அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கான வழியாகி விடும். ஏனென்றால், இதன் மூலமாக அவர்கள் அல்லாஹ்வின் ஆட்சியை உலகில் நிலைநாட்ட முயற்சி செய்கின்றார்கள். அதற்காக அவர் தொடர்ந்து முயற்சி செய்து வருவார். எனது அடியாருக்கு இப்படிப்பட்ட நிலை உருவாகி விட்டால் அப்படிப்பட்டவருக்கு நற்செய்தி வழங்கப்படுகிறது. அந்த நற்செய்தி இனி வருங்காலத்திலும் அவருக்கு நற்செய்திகளை வழங்கிக் கொண்டே செல்லும் என்று அல்லாஹ் இந்த வசனத்தில் கூறியுள்ளான். நமது பயணமும், பயணமில்லாத நிலையும் நன்மைகளைச் செய்யவும் நன்மைகளைப் பரப்பவும் காரணமாக அமையவும் இறைவனின் ஆட்சியை உலகில் ஏற்படுத்தக் காரணமாக அமையவும் அல்லாஹ் செய்வானாக! அதன் மூலம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றவாறு அவனது அருட்கொடைகளைப் பெறுபவர்களாக நாம் இருக்க வேண்டும்.

இன்ஷா அல்லாஹ் இரண்டு மூன்று நாட்களுக்குள் நான் பயணம் செல்ல இருக்கின்றேன். மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள மூன்று நாடுகளான கானா, பெனின், நைஜீரியா ஆகியவற்றிற்கு நான் செல்லவுள்ளேன். இந்த நாட்டில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் கிலாஃபத் நூற்றாண்டையொட்டி நடைபெறும் முதல் நிகழ்ச்சிகளாக இருக்கின்றன. அதில் நான் கலந்து கொள்ள இருக்கின்றேன். இன்ஷா அல்லாஹ். இப்போது இந்த நிகழ்ச்சிகளுடன் பல்வேறு நாடுகளிலும் நிகழ்ச்சிகள் நடைபெற இருக்கின்றன. சில நாடுகளில் நடைபெற உள்ள நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொள்வேன். இன்ஷா அல்லாஹ்.

எனவே, ஏறக்குறைய இவ்வருடம் முழுவதுமே மிகவும் பணிகள் நிறைந்த பயணங்கள் அதிகமாக செல்ல வேண்டிய ஆண்டாக இருக்கும். கடந்த நூறு ஆண்டு காலமாக ஜமாஅத்தின் மீது அல்லாஹ் பொழிந்துள்ள அருள்களின் மழை நமது இறைவணக்கங்களின் தரத்தை உயர்த்துவதாகவும் நமது பணிவின் தரத்தை உயர்த்துவதாகவும் இருக்க அல்லாஹ் உதவி செய்வானாக! நன்மைகளைப் பரப்புவதற்கும் தீமைகளைத் தடுப்பதற்கும் நாம் முன்பை விட அதிகமாக கவனம் செலுத்துபவர்களாக இருக்க வேண்டும். குறிப்பாக எனது ஒவ்வொரு பயணமும் இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அல்லாஹ்வின் உதவியைப் பெற்றதாக அமையட்டும். அல்லாஹ் பயணத்தின்போதும் பாதுகாவலனாகவும் உதவி செய்பவனாகவும் இருப்பானாக! ஆமீன். எந்த இடத்திற்கு நாம் சென்றாலும் அங்கு அல்லாஹ் தனது வல்லமையின் காட்சியைக் காட்டுவானாக! நாம் பலவீனமான அவனது எளிமையான அடியார்களாக இருக்கின்றோம். அல்லாஹ்வின் உதவி நமக்குக் கிடைக்காமல் இருந்தால் நாமே எவரிடத்திலும் நன்மையை நிலைபெறச் செய்ய முடியாது. மற்றவர்களுக்கும் நாம் நன்மையைப் போதிக்க முடியாது. இந்தப் பயணமும் நற்செய்திகளைத் தரக்கூடிய பயணமாக இருக்க முடியாது.

எனவே, அவனது அருள்களைப் பெறுவதற்காக அவன் முன்னால் குனிவது தான் நமது முயற்சிகளுக்கு சிறந்த கனிகளைத் தரக்கூடியதாக இருக்கும். அல்லாஹ் இதில் நமக்கு வெற்றியை வழங்குவானாக! ஆமீன்.

பயணத்தை தொடங்குவதற்கு முன்னர் செய்ய வேண்டிய சில துஆக்களை அல்லாஹ் திருக்குர்ஆனில் கற்றுத் தந்துள்ளான். இந்த துஆக்கள் நாம் சுகமாக பயணம் செய்வதற்கு காரணமாக அமைவதோடு மட்டுமல்லாமல் அல்லாஹ்வின் அருட்கொடைகளையும் அது அதிகமாக்குகின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு பயணத்தைத் தொடங்குவதற்கு முன்னரும் துஆ செய்துள்ளார்கள். சவாரி செய்யும் போது செய்யும் துஆ பற்றி அல்லாஹ் கூறுகின்றான்:

நீங்கள் அவற்றின் முதுகுகளின் மீது உறுதியாக அமர்வதற்காகவும், பின்னர் நீங்கள் அவற்றின் மீது உறுதியாக அமரும்போது உங்கள் இறைவனின் அருளை நீங்கள் நினைவு கூர்ந்து (இவ்வாறு) கூறுவீர்களாக!

நாமாகவே இவற்றை அடக்கி பயனடைய இயலாதவர்களாக இருந்தும் இவற்றை நமக்குத் தொண்டாற்றச் செய்தவன் தூயவன்.

மேலும் நிச்சயமாக நாங்கள் எங்கள் இறைவனிடமே திரும்பிச் செல்பவர்களாவோம் (என்று கூறுவீர்களாக). (43:14,15)

இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பி வைத்துள்ள இறைவன் தமது வாக்குறுதிக்கு ஏற்ப மிக எளிதாகவும் குறைந்த நேரத்திலும் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நம்மை கொண்டு செல்லக் கூடிய வாகனங்களை நமக்குத் தந்துள்ளான். மனிதன் இந்த சிந்தனையுடன் அல்லாஹ்வின் அருட்கொடைகளைப் பேணி நன்றி தெரிவித்தால், அவனது தூய்மையை எடுத்துரைத்தால் (தஸ்பீஹ் செய்தவாறு) உண்மையிலேயே அவன் முன்பு ருகூஉ செய்பவராகவும், ஸஜ்தா செய்பவராகவும் இருந்து அல்லாஹ்வின் தூதுச் செய்தியை உலகிற்கு எடுத்துரைப்பவராக ஆகி விட்டால் பிறகு ஒவ்வொரு பயணமும் அல்லாஹ்வின் அருட்கொடைகளை ஒன்று சேர்க்கின்ற பயணமாக இருக்கும்.

எனது ஒவ்வொரு பயணமும் இப்படிப்பட்ட உணர்வுடன் கூடிய பயணமாக அமைய நீங்கள் துஆ செய்யுங்கள். முழு ஜமாஅத்தின் துஆக்களின் அலைகள் ஒருபுறம் எழும்போது அதற்கேற்ப அல்லாஹ்வின் அருள்களும் பல மடங்கு அதிகரித்து விடும். அல்லாஹ் நமக்கு துஆக்கள் செய்வதற்கான தவ்ஃபீக்கை வழங்குவானாக! அவற்றை ஏற்றுக்கொள்ளவும் செய்வானாக! நாம் நமது ஒவ்வொரு அடியை எடுத்து வைக்கும்போதும் அவனது அருள்கள் வெளிப்படும் காட்சியை முன்பை விட அதிகமாகக் காண்பதற்கு அல்லாஹ் அருள்புரிவானாக! அல்லாஹ் நாம் நமது ஒவ்வொரு அடியை எடுத்து வைக்கின்றபோதும் அல்லாஹ் நமது பலவீனங்களை அகற்றுவானாக! நமது குறைகளைத் திரையிட்டு மறைப்பானாக! நமது எந்த தவறும் எந்த பலவீனமும் அல்லாஹ்வின் அருள்களை நம்மிடமிருந்து விலக்கிக் கொண்டு செல்லக் கூடியவையாக இல்லாமல் இருக்கட்டும்!

இப்போது நான் பயணம் தொடர்பாக சில நபிமொழிகளைக் கூறுவேன். அவற்றில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்குப் போதனைகளை வழங்கி பயணம் தொடர்பான வழிகாட்டல்களையும் நமக்கு வழங்கியுள்ளார்கள். அதன் மூலம் பயணம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்குக் காரணமாக அமையும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயணத்தில் செல்கின்ற ஒருவரை அவர் பயணத்தை தொடங்குவதற்கு முன்னர் எவ்வாறு துஆ செய்து அனுப்பி வைப்பார்கள் என்பதைப் பற்றி நபிமொழி அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது.

*ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:*

ஒரு நபர் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களிடம் வந்தார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் பயணம் செல்ல இருக்கிறேன் என்று கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவரிடம் எப்போது செல்வீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அவர் இன்ஷா அல்லாஹ் நாளை செல்லவிருக்கின்றேன் என்று கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நபரின் கையைப் பிடித்து இவ்வாறு கூறினார்கள்.

***ஃபீ ஹிஃப்ஸில்லாஹி வஃபீகனஃபிஹி ஸவ்வதகல்லாஹுத்தக்வா வகஃபரலக ஸம்பக்க வவஜ்ஜஹக லில்கைய்ரி அய்னமா தவகஃத்த வஅய்னமா தவஜ்ஜஹ்த.***

நீர் அல்லாஹ்வின் பாதுகாப்பில் இருப்பீராக! அவன் பக்கத்தில் இருப்பீராக! அல்லாஹ் இறையச்சத்தை உமது பயணத்தின் உணவாக ஆக்குவானாக! உமக்காக உமது பாவங்களை மன்னிப்பானாக! நீர் எங்கு செல்ல நாடினாலும், எங்கு உமது கவனத்தைத் திருப்பினாலும் அல்லாஹ் நன்மையின் பக்கமே உமது கவனத்தைத் திருப்புவானாக!

இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள்.

பயணம் செல்வதற்கு முன்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது செயல் எவ்வாறிருந்தது? இது தொடர்பாக சில அறிவிப்புகளை உங்கள் முன் வைக்கின்றேன்.

பயணத்தில் வெற்றி கிடைப்பதற்காகவும், இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவும் இந்த அழகிய முன்மாதிரியைப் பின்பற்றி நடப்பதன் மூலமாகவே இறை அருள்களை நாம் பெற முடியும்.

*ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:*

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயணத்தின்போது ஏதாவதொரு இடத்தில் தங்கும்போது அங்கு இரண்டு ரக்அத்துக்கள் தொழாதவரை அந்த இடத்தை விட்டும் செல்லமாட்டார்கள். அவ்வாறே எந்த இடத்தை விட்டு விட்டு சென்றாலும் அவர்கள் அங்கிருந்து செல்வதற்கு முன்னர் இரண்டு ரக்அத்துக்கள் தொழுது விட்டு செல்வார்கள்.

பயணம் தொடங்குவதற்கு முன்னரும் பயணம் முடிந்த பிறகும் ஸதகா கொடுப்பது பற்றியும் நபிமொழி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா சமயத்திலும் ஸதகா கொடுத்துள்ளார்கள். ஆனால், பயணம் தொடர்பாக விலங்கை குர்பானி கொடுத்தது பற்றி கூறப்பட்டிருக்கின்றது.

*ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:*

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஜ் செய்துவிட்டு அல்லது உம்ரா செய்து விட்டு திரும்பும் வழியில் ஏதாவது ஒரு பள்ளத்தாக்கை கடக்க நேரிட்டால் மூன்று முறை அல்லாஹு அக்பர் என்று கூறுவார்கள். பிறகு இவ்வாறு கூறுவார்கள்:

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் எவனுமில்லை. அவன் ஒருவன். அவனுக்கு இணையாக யாரும் இல்லை. அரசாட்சி அவனுக்குரியது. எல்லாப் புகழும் அவனுக்கே உரியது. அவன் எல்லாப் பொருள்கள் மீதும் ஆற்றல் உள்ளவனாவான். நாங்கள் திரும்பிச் செல்லக்கூடியவர்களாக இருக்கின்றோம். தவ்பா செய்யக்கூடியவர்களாக இருக்கின்றோம். ஸஜ்தா செய்பவர்களாக இருக்கின்றோம். எங்களது இறைவனைப் புகழ்பவர்களாக இருக்கின்றோம். அல்லாஹ் தனது வாக்குறுதியை உண்மையாகவே நிறைவேற்றியுள்ளான். தனது அடியானுக்கு உதவி செய்துள்ளான். தனித்திருக்கும் நிலையிலேயே அவன் எல்லாப் பிரிவினர்களையும் தோற்கடித்து விட்டான்.

அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் செய்த வாக்குறுதியை உண்மையாகவே நிறைவேற்றுவானாக! நமது எந்தப் பலவீனமும் நம்மை அவற்றிலிருந்து விலக்கிக் கொண்டு செல்லாமல் இருக்கட்டுமாக! மேலும் உலகில் விரைவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கொடி பறப்பதைப் பார்க்கும்படி அல்லாஹ் செய்வானாக!

*ஹஸ்ரத் ஹவ்லா பின்த் ஹகீம் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:*

நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுவதைக் கேட்டேன். உங்களில் எவராவது எந்த இடத்தில் தங்கினாலும் அவர் இவ்வாறு கூற வேண்டும்.

அல்லாஹ் எதைப் படைத்துள்ளானோ நான் அவற்றின் தீங்கிலிருந்தும் அல்லாஹ்வின் எல்லா வார்த்தைகளின் அடைக்கலத்தின்கீழ் வருகின்றேன்.

இவ்வாறு அவர் கூறினால் அவர் தங்கியிருந்த இடத்தை விட்டு அவர் செல்லும் வரை எந்தவொரு பொருளும் அவருக்கு எந்த துன்பத்தையும் தராது.

*ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:*

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

மூன்று ஏற்றுக் கொள்ளப்படும் துஆக்கள் உள்ளன. அவை, ஏற்றுக் கொள்ளப்படுவதில் எவ்வித சந்தேகமும் இல்லை. **ஒன்று,** அநீதியிழைக்கப் பட்டவரின் துஆ. இரண்டு, பயணிகளின் துஆ. **மூன்றாவது,** தந்தை தனது சந்ததிக்காக செய்யும் துஆ.

எனவே, பயணிகள் தங்களுக்கு கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்திலிருந்து பலன் பெற வேண்டும். முழு நேரத்தையும் வீண் பேச்சுக்களில் கழிப்பதற்குப் பகரமாக துஆக்களின் பக்கம் நமது கவனம் இருக்க வேண்டும். அல்லாஹ் நமக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! முழுக்க முழுக்க தனது அருளால் இந்த துஆக்களையும் அவன் ஏற்றுக் கொள்வானாக!

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த ஒரு துஆ நபிமொழி அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது.

*நபித்தோழரான ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:*

ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் தான் செல்ல நாடியுள்ள எந்தவொரு நகரத்தைக் கண்டாலும் இவ்வாறு துஆ செய்வார்கள். அல்லாஹ்வே! ஏழு வானங்களுடையதும் அவற்றின் நிழல் எதன் மீது இருக்கின்றதோ அவற்றினுடையதும் இறைவனே! ஏழு பூமிகளுடையதும் அவை எவற்றை தாங்கி நிற்கின்றதோ அவற்றின் இறைவனே! ஷய்த்தான்கள், ஜின்கள் ஆகியவை எவர்களை வழிதவறிச் செல்ல விட்டார்களோ அவர்களின் இறைவனே! காற்று மற்றும் அவை எதைப் பறக்கும்படி செய்கின்றதோ அவற்றின் இறைவனே! நான் உன்னிடம் இந்த நகரத்திற்கும் இதில் வாழ்பவர்களுக்கும் நன்மையை வேண்டுகிறேன். மேலும் நான் உன்னிடம் இந்த நகரத்தின் தீமையில் இருந்தும் இந்த நகரத்தில் வாழ்பவர்களின் தீங்கிலிருந்தும் எவையெல்லாம் இவற்றில் இருக்கின்றதோ அவற்றின் தீங்கிலிருந்தும் உனது அடைக்கலத்தின் கீழ் வருகின்றேன். எங்கள் இறைவனே! எங்களுக்காக இந்த நகரத்தின் மீது அருள் புரிவாயாக! இந்த நகரத்தில் எங்கள் மீது அருள் புரிவாயாக! எங்கள் இறைவனே! இதன் கனிகளிலிருந்து எங்களுக்கு உணவை வழங்குவாயாக! இந்த நகரத்தில் வாழ்பவர்களின் உள்ளத்தில் எங்கள் மீது அன்பை ஏற்படுத்துவாயாக! இந்நகரத்தில் வாழ்கின்ற நல்லியல்பு கொண்டவர்கள் குறித்து எங்கள் உள்ளங்களில் அன்பை ஏற்படுத்துவாயாக!

பயணம் தொடங்குவதற்கு முன்பு இந்த துஆவைச் செய்யும்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சர்ஜிஸ் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பயணம் தொடங்குவதற்கு முன்னர் இந்த துஆவை ஓதுவார்கள்.

***அல்லாஹும்ம இன்னீ அவூதுபிக்க மின்வஃ-ஃஇஸ்ஸஃபரி வகாப்பத்தில் முன்கலபி வல்ஹவ்ரி பஃதல் கவ்ரி வதஃவத்தில் மலுலூமி வஸூஇல் மன்ழரி ஃபில் அஹ்லி வல்மாலி.***

அல்லாஹ்வே! நான் பயணத்தின் துன்பங்களிலிருந்தும் பயணத்திலிருந்து திரும்பும்போது துக்கத்துடன் திரும்புவதிலிருந்தும் இலாபம் கிடைத்த பிறகு இழப்புகள் ஏற்படுவதிலிருந்தும் அநீதியிழைக்கப்பட்டவரின் துஆவிலிருந்தும் வீட்டிலும் செல்வத்திலும் தீய காட்சிகள் தென்படுவதிலிருந்தும் நான் உனது அடைக்கலத்தின்கீழ் வருகின்றேன்.

*ஹஸ்ரத் உம்மு ஸல்மா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:*

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வீட்டிலிருந்து வெளியே செல்லும் போது இவ்வாறு துஆ செய்வார்கள்.

அல்லாஹ்வே! நான் வழிதவறிச் செல்வதிலிருந்தும், தடுமாற்றம் அடைவதிலிருந்தும், பிறருக்கு அநீதியிழைப்பதிலிருந்தும், என் மீது அநீதியிழைக்கப்படுவதிலிருந்தும், நான் அறிவீனமாக நடந்து கொள்வதிலிருந்தும், என்னிடம் அறிவீனமாகப் பிறர் பரிமாறுவதிலிருந்தும் நான் உன்னிடம் அடைக்கலம் தேடுகின்றேன்.

பிறகு பயணத்தைத் தொடங்கும் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த சில துஆக்கள் பற்றி நபிமொழி அறிவிப்புகளில் இவ்வாறு வந்துள்ளது.

*ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:*

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயணம் செல்வதற்கு முன்பு தனது ஒட்டகத்தில் அமர்ந்தவாறு தனது விரலால் சைகை செய்தவாறு இவ்வாறு கூறுவார்கள். அல்லாஹ்வே! எனது பயணத்தில் நீயே எனது நண்பனாவாய். நான் விட்டுச் செல்லும் எனது வீட்டில் உள்ளவர்களின் பாதுகாவலனாக நீயே இருக்கின்றாய்.

அல்லாஹ்வே! நன்மையுடன் நீ எங்களை நலமாகக் கொண்டு செல்வாயாக! எங்களை உனது பொறுப்பிலேயே நீ திரும்பிக் கொண்டு வர வேண்டும்.

அல்லாஹ்வே! எங்களுக்காக பூமியை சுருங்கும்படி செய்வாயாக! அதை நீ எங்களுக்கு நீ எளிதாக்கித் தருவாயாக! அல்லாஹ்வே! நான் பயணத்தின் துன்பத்தில் இருந்தும் கடினத்திலிருந்தும் பயணத்திலிருந்து திரும்பும்போது துக்கத்துடனும் வேதனையுடனும் திரும்புவதிலிருந்தும் உனது அடைக்கலத்தின் கீழ் வருகின்றேன்.

*அப்துர் ரஸ்ஸாக் அறிவிக்கின்றார்கள். அப்துர் ரஸ்ஸாக் அவர்களிடம் ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:*

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயணத்தில் செல்ல ஆரம்பிக்கும் போது தனது சவாரியில் நன்றாக அமர்ந்த பிறகு அவர்கள் மூன்று முறை தக்பீர் கூறுவார்கள். பிறகு இவ்வாறு திருக்குர்ஆனிலுள்ள துஆவை செய்வார்கள்.

***ஃஸுப்ஹானல்லதீ ஸஹ்ஹரலனா ஹாதா வமா குன்னா லஹுமுக்ரினீன். வ இன்னா இலா ரப்பினா லமுன்கலிபூன்.***

இதன் மீது (செல்ல) சக்தியற்றவர்களாக இருந்த எங்களுக்கு இதனை வசப்படுத்தித் தந்த அந்த இறைவன் மிக்க பரிசுத்தமானவன். மேலும் நிச்சயமாக நாம் எங்கள் இறைவனிடத்தில் திரும்பிச் செல்பவர்களாக இருக்கின்றோம்.

தொடர்ந்து அல்லாஹ்வே! நீயே இந்த பயணத்தில் எனது உண்மையான நண்பனாக இருக்கின்றாய். எனது வீட்டில் உள்ளவர்களையும் எனது செல்வத்தையும் உண்மையில் பாதுகாப்பவன் நீயே ஆவாய் என்றும் கூறுவார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயணத்திலிருந்து திரும்பி வரும்போது இந்த சொற்களை அதிகமாகக் கூறுவார்கள்.

நாங்கள் திரும்புபவர்களாக இருக்கின்றோம். நாங்கள் தவ்பா செய்பவர்களாக இருக்கின்றோம். நாங்கள் இறைவனை வணங்குபவர்களாக இருக்கின்றோம். எங்களது இறைவனின் புகழை எடுத்துரைப்பவர்களாக இருக்கின்றோம்.

ஏதாவது ஒரு மேடான இடத்தில் ஏறிச் செல்கின்றபோது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹு அக்பர் என்றும் அதிலிருந்து இறங்கும்போது சுப்ஹானல்லாஹ் என்றும் கூறுவார்கள்.

நாமும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ள இந்த துஆக்களுடன் நமது பயணத்தை தொடங்குகின்றோம். அல்லாஹ் தனது அன்பான நபி (ஸல்) அவர்களின் நாவிலிருந்து வெளியான இந்த சொற்களிலுள்ள அருட்களால் நமது பயணத்தையும் எளிதாக்கித் தருவானாக! அவற்றில் அருள் புரிவானாக! நலத்துடன் அந்த அருட்களை சேகரித்தவாறு நாம் திரும்புவோமாக! அந்த அருட்கள் என்றென்றும் நிலைத்திருக்கும் அருட்களாக இருக்கட்டும்! எந்தெந்த நாடுகளுக்கு சென்றாலும் எந்த ஜமாஅத்துகளுக்கு சென்றாலும் அல்லது எங்கெல்லாம் இந்த நிகழ்ச்சிகள் நடக்கின்றதோ அப்படிப்பட்ட எல்லா இடத்திலும் இந்த அருட்கள் வெளிப்படட்டும். அல்லாஹ் தனது ஏகத்துவத்தின் கொடி முழு உலகிலும் பறக்கக்கூடிய அந்த நாளை விரைவாக நமக்குக் காட்டுவானாக!

நான் இன்னொரு விஷயத்தையும் இங்கு கூற விரும்புகின்றேன். அது ஜெர்மனியிலுள்ள லஜ்னாக்களுக்கு மிக முக்கியமான ஒரு விஷயமாகும். இந்த விஷயம் இந்த பயணத்தின் காரணமாக அதிகம் எனது நினைவில் வந்தது. ஜெர்மனியிலுள்ள லஜ்னாக்கள் உலகில் எல்லாப் பகுதிகளிலும் கிலாஃபத் ஜுப்ளி மாநாடுகள் நடைபெறும்போது நாம் இதிலிருந்தும் புறக்கணிக்கப்பட்டு விடுவோமோ என்று நினைத்து அவர்கள் நிம்மதியிழந்தவர்களாக இருக்கின்றார்கள். ஏனென்றால், கடந்த வருடம் இவர்களது மாநாட்டில் முழுமையான Discipline பேணப்படாமல் இருந்ததால் அடுத்த வருடம் உங்கள் மாநாடு நடத்தப்படாமல் இருக்கலாம் என்று நான் கூறியிருந்தேன். உங்களை நீங்கள் சீர்திருத்திக் கொள்ளாதவரை இந்த நிலை நீடிக்கும் என்று கூறியிருந்தேன். இதற்குப் பிறகு அதிகமான பெண்கள் சிறுமிகள் எனக்கு எண்ணற்ற கடிதங்களை எழுதினார்கள். எங்களை மன்னித்து விடுங்கள். இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட ஒழுங்கற்ற நிலை இருக்காது என்று அவர்கள் எழுதியிருந்தார்கள். மேலும் ஜெர்மனியிலுள்ள லஜ்னாக்கள் மீதுள்ள அனுதாபத்தில் மற்ற நாடுகளிலுள்ள உறுப்பினர்களும் கூட எனக்கு கடிதங்கள் எழுதினார்கள். எங்களை மாநாட்டிலிருந்தும் விலக்கி வைக்காதீர்கள் என அவற்றில் அவர்கள் எழுதியிருந்தார்கள். எனக்கு நினைவில் வருகின்றது. முதலாவதாக, தங்களை மன்னிக்கும்படி கேட்டு பாகிஸ்தானிலிருந்து கடிதம் வந்தது. அது அவர்களை சீர்திருத்துவதற்காக எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையேயாகும். இதன் காரணமாக ஜெர்மனியிலுள்ள லஜ்னாக்களின் நேஷனல் இஜ்திமாவும் நடத்தப்படவில்லை. முதலில் சிறிய அளவில் இஜ்திமாக்கள் நடத்தப்பட்டு மாநாட்டின் முக்கியத்துவம் தொடர்பாக பெண்களுக்குப் புரிய வையுங்கள் என்று நான் கூறினேன். அதற்கு மிகச் சிறந்த நல்ல விளைவு ஏற்பட்டது.

அல்ஹம்துலில்லாஹ் எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் ஒரு புரட்சிகரமான மாற்றம் பெரும்பாலான பெண்களிடம் ஏற்பட்டு விட்டது. எனக்கு வந்த கடிதங்களிலும் கூட பெண்கள் தவ்பாவின் பக்கமும் இஸ்திக்ஃபாரின் பக்கமும் குறிப்பாக கவனம் செலுத்தியிருப்பது தெரிய வந்தது. மனத்தூய்மையிலும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வதிலும் பெண்கள் எந்த அளவு முன்னேறி உள்ளனர் என்றால் இப்படிப்பட்ட காட்சிகளை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் தான் நம்மால் பார்க்க முடியும். உலக விஷயத்திற்காக அல்லாமல் மார்க்கத்திற்காக இந்த அளவு வேதனையுடன் முயற்சிகள் செய்யப்படுவதை வேறு எங்கும் நாம் காண முடியாது. கிலாஃபத்தின் மீதுள்ள அன்பை வெளிப்படுத்தியவாறு மன்னிப்புக் கேட்டவாறு சிறுமிகளும், குமரிப் பெண்களும், பெண்களும் கடிதங்கள் எழுதிக் கொண்டே இருந்தார்கள். ஒரு சகோதரி இவ்வாறு எழுதியிருந்தார். ஒரு அஹ்மதி அல்லாத பெண் என்னிடம் உங்களது கலீஃபா உங்களிடம் வெறுப்படைந்துள்ளதாக கேள்விப்பட்டேனே என்று என்னிடம் கேட்டார். அத்துடன் நீங்கள் கட்டுப்பாடற்ற பெண்கள் ஆவீர்கள் என்றும் கூறினார். அவருக்கு நான் என்ன பதில் சொல்வது என்று சிந்தித்துக் கொண்டிருந்த சமயத்தில் அந்த அஹ்மதியல்லாத பெண் தாமாகவே என்னிடம்

உங்களது தவறுகளை சுட்டிக் காட்டுவதற்கென்று ஒருவர் உங்களுக்கு இருக்கின்றார் என்பதற்காக நீங்கள் இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். தவறை நீங்கள் செய்யும் போது அதைப் பற்றி உங்களுக்கு புரிய வைப்பதற்காக ஒருவர் இருக்கின்றார். நாங்களோ தீமைகளில் சிக்கித் தவிக்கின்றோம். ஆனால் எங்களிடம் கேள்வி கேட்பவர் யாருமேயில்லை.

நான் இதைக் கூறுவதன் நோக்கம் நான் எடுத்த நடவடிக்கையானது ஜெர்மனியிலுள்ள எல்லா லஜ்னாக்களிடமிமும் நாஸிராத்களிடமும், சிறுமிகளிடமும் ஒரு அமைதியின்மையின் அலையை ஏற்படுத்தி விட்டது. இதன் காரணமாக அவர்கள் துஆவும் செய்தார்கள். தங்களிடம் தூய்மையான மாற்றத்தையும் ஏற்படுத்தினார்கள். நான் இவர்களிடமிருந்து முழுமையான ரிப்போர்ட் வருவதற்காக காத்திருந்தேன். ஆனால் சிறிது காலத்திற்கு முன்பே நான் அங்குள்ள அமீர் சாஹிபிடமும் லஜ்னா தலைவி இடமும் நீங்கள் யாரிடமும் எதுவும் கூறாமல் அமைதியாக மாநாட்டிற்கான தயாரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருங்கள் என்று நான் கூறியதற்கு ஏற்ப அவர்கள் எதுவும் நடக்காதது போன்றே இருந்தவாறு மிகவும் அமைதியுடன் மாநாட்டிற்காக தயாராகி வருகிறார்கள் என்றே எனக்குத் தெரிகிறது. ஜெர்மனியிலுள்ள லஜ்னாக்களும் சிறுமிகளும் எந்த அளவு மனத்தூய்மையையும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வதையும் வெளிப்படுத்திக் காட்டியுள்ளனர் என்றால் அதை நான் சொற்களால் கூற முடியாது. எவ்வாறிருப்பினும் இந்த வருடம் அங்கு பெண்களுக்கான மாநாடு நடைபெறும் இன்ஷா அல்லாஹ். ஆனால் இந்த சம்பவம் ஜெர்மனியிலுள்ள லஜ்னாக்களுக்கு எனது உள்ளத்திலுள்ள மதிப்பை பல மடங்கு அதிகமாக்கி விட்டது. அல்லாஹ் உங்களது மனத்தூய்மையையும் நல்லெண்ணத்தையும் வளர்ச்சி அடையச் செய்வானாக! ஒவ்வொரு நொடியும் நீங்கள் முன்னேறிக் கொண்டேயிருக்கும்படி செய்வானாக!

மீண்டும் நான் துஆவிற்காக வேண்டுகின்றேன். உங்களது நாடுகளில் நடைபெறும் மாநாடுகளுக்காகவும் எனது சுற்றுப் பயணத்திற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் எப்போதும் தனது அருட்களின் கதவுகளை நமக்குத் திறந்து தந்து கொண்டே இருப்பானாக!

★★★★★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH, LONDON**

**ON 11.04.2008**

Translated by : **Maulavi M. RAFEEQ AHMAD H.A**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**